DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 6 |
| Name | : | **முத்துப்பாண்டி** |
| Father's Name | : | **சாத்தையா** |
| Village | : | **மீனாட்சிபுரம்** |
| Taluk | : | **காரைக்குடி** |
| Calling | : | **விவசாயம்** |
| Age | : | **60/2025** |

**(வழக்கின் எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மீனாட்சிபுரத்தில் குடியிருந்த விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. அ.சா. 3 காந்தி என்பவரை எனக்குத் தெரியும். அவர் எங்களை ஊரைச் சார்ந்தவர். சுமார் 1 வருடத்திற்கு முன்பு காலை 10.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். லெட்சபாண்டி என்பவருக்கும் மற்றொரு நபருக்கும் இடையே முந்தையநாள் சண்டை என்று என்று சொன்னார்கள். யாரும் கையெழுத்து போடாததால் என்னிடம் கையொப்பம் செய்யும்படி போலிசார் சொன்னார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்குவதற்கு முன்பு வழக்கு தொடர்பாக என்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 2** ஆகும். அத்தாச்சியில் உள்ள 1 வது கையொப்பம்

என்னுடையது தான் அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 3** ஆகும். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 08.06.2023 ம் தேதி இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக தேவகோட்டை போலிசார் இந்த வழக்கின் சம்பவ இடத்திற்கு இரவில் வந்து 1 வது எதிரியின் வீட்டிற்கு அருகில் கிடந்த ஆர்.எஸ்.பதி கம்பு ஒன்றை அத்தாச்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அதன் பின்பு மறுநாள் காலை 09.06.2023 ம் தேதி காலை 8.30 மணியளவில் தேவகோட்டை போலிசார் வழக்கின் சம்பவ இடத்தை என் முன்பாகவும், அ.சா. 3 காந்தி என்பவர் முன்பாகவும் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு. தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்**

இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Chief Judicial Magistrate,

Sivagangai.